**செய்தி வெளியீடு எண்: 159** **நாள்: 24.02.2020**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (24.2.2020) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பணியாற்றிய சிறுமி ச. பவதாரணி அவர்களுக்கு பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக இணைந்துள்ள 14 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/– வைப்பீட்டு தொகைக்கான பத்திரங்களையும், இத்திட்டத்தில் இணைந்து தற்போது 18 வயது பூர்த்தியடைந்த 7 பெண்களுக்கு முதிர்வுத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

பெண் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, அவர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உயர்ந்த சேவையினை நினைவு கூரும் வகையில், அவரது பிறந்த நாளான பிப்ரவரி 24–ஆம் நாளை 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்'–ஆக அனுசரிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.2.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல்புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கு வழங்கப்படும், இந்த ஆண்டிற்கான பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது, போஷன் அபியான் திட்டம், நெகிழி பயன்பாட்டைத் தவிர்த்தல், வாக்களிக்க மக்களை ஊக்குவித்தல், கண்தானம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொண்டதற்காக, கடலூர் மாவட்டம், மாலுமியர்பேட்டையைச் சார்ந்த 9 வயது சிறுமி ச. பவதாரணி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள்

இன்று மாநில அரசின் விருதிற்கான 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் வழங்கி, பாராட்டினார்கள்.

மேலும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக இணைந்துள்ள 14 பெண் குழந்தைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் அக்குழந்தைகளின் பெயரில் தலா ரூ.25,000/– வைப்பீட்டு தொகை செய்யப்பட்டதற்கான பத்திரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து, தற்போது 18 வயது பூர்த்தியடைந்த 7 பெண்களுக்கு முதிர்வுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., சமூகநல ஆணையர் திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.2.2020**